1987 மார்ச் 28]

ஜெயங்கொண்டத்தில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதி மன்றத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல்

222—(*வினா எண் 9934) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் நகரில் உள்ள இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்திற்கு புதிதாக கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) திட்டப் பணி எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ந. மாசிலாமணி: தலைவர் அவர்களே, இந்த ஜெயங்கொண்டம் நீதிமன்றம் துவக்கப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அந்த நீதிமன்றக் கட்டிடமும் கட்டப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அக் கட்டிடம் இடிந்த நிலையில் மேற்கூரையும் இல்லாமல் பெயர்க்கப்பட்டு, சுவர்களும் பழுதடைந்திருக்கின்றன. அந்த நீதிமன்றம் தற்போது மாட்டுத் தொழுவம் போல் இருக்கிறது. எனவே அந்தக் கட்டிடத்தினுடைய அவசரத்தையும், அவசியத்தையும் உணர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதியதாக கட்டிடம் கட்டித்தர மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதிக்கு புதியதாக கட்டிடம் கட்ட வேண்டும் என்று அரசுக்கு உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்யவில்லை. பிரையாரிட்டி என்ற முறையில் பல பரிந்துரைகளை செய்திருக்கிறார்கள். அதிலே இது இடம் பெறவில்லை. வேண்டுமானால் மீண்டும் இதுகுறித்து உயர்நீதிமன்றத்திடம் அரசு கேட்கும்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போதுள்ள நீதிமன்றம் வருவாய் துறையினுடைய வட்டாட்சியர் அலுவலக வளாகத்தினுள் இயங்கி வருகிறது. அங்கே இருக்கிற பார்-கவுன்சில் சார்பாகவும் மாவட்ட அளவில் உள்ள நீதித் துறையின் சார்பாகவும் அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். வருவாய் துறையிலே இருந்தும் வேண்டிய இட வசதியைச் செய்வதாக அவர்கள் உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். எனவே அந்தா கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு விரைவில் புதிய கட்டிடம் இந்த நீதிமன்றத்திற்கு கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, Priority is being decided only in consultation with the High Court உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையை பெற்ற பிறகுதான் செய்ய முடியும். உயர்நீதிமன்றத்தை கலந்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள பல மாவட்ட முன்சீப் நீதி மன்றங்கள் வாடகைக் கட்டிடங்களிலேயும், பழைய கட்டிடங் களிலேயும் இருக்கின்றன. ஏற்கெனவே இருக்கிற கட்டிடங்கள், வழக்குகள் அதிகமாகியிருக்கிற காரணத்தால் அடிஷனல் கோர்ட் அமைப்பதற்கு போதுமான அளவுக்கு இல்லை. எனவே குறிப்பிட்ட கால நெடுவுக்குள் தமிழ்நாட்டில் உள்ள வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்கு சொந்த கட்டிடங்கள் கட்டிக் கொடுத்தும், அடிஷனல் பில்டிங் தேவைப் படுகிற நீதிமன்றங்களுக்கு அடிஷனல் பில்டிங் கட்டிக் கொடுத்தும் நிறைவுசெய்கிற செயற்குறிப்பு ஒன்றை அரசே உருவாக்கித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் எல்லா நீதிமன்றங் களுக்கும் அரசு சொந்தக் கட்டிடம் கட்ட வேண்டும் என்றால் கிட்டத்தட்ட ரூ. 500 கோடிக்கு மேல் உடனடியாக தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நீதித்துறைக்கு நிதி ஒதுக்குவதைப் பொறுத்த வரைக்கும் கோர் செக்டார் என்று

சொல்லக்கூடிய பிரையாரிட்டி செக்டாரில் அமையாத காரணத்தால் மத்திய அரசிடமிருந்து வருகிற நிதி மிக மிக சொற்பமாக இருப்பதால் மாநில அரசே தன்னுடைய நிதி ஆதாரங்களிலிருந்து அதைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறது. நிதிநிலைமைக்கு ஏற்ப அவ்வப்போது இவைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி அவர்கள் கூறியது போல் இடிந்த நிலையில் இருக்கிற கட்டிடங்களுக்குத்தான் முன் உரிமை கொடுத்து, இருக்கிற நிதிக்கு ஏற்ப நாம் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பெண்ணாகரத்தில் ஒரு மாஜிஸ்ட்டிரேட் கோர்ட் இருக்கிறது. அந்த கோர்ட் துவக்கப்பட்டு சுமார் 5 வருடம் ஆகிறது. அந்த கோர்ட் பழைய இடிந்த கட்டிடத்தில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதற்குத் தனியாக கட்டிடம் கட்டித் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும்.

நீலகிரி மாவட்டம், கூனூர் வட்டம், மஞ்சக்கொம்பை பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

223—(* வினா எண் 10350) திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூனூர் வட்டம், மஞ்சக் கொம்பை பகுதியில் உள்ள பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டி கோரிக்கை மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 1986-87 கல்வி ஆண்டில் நீலகிரி மாவட்டம் மஞ்சக்கொம்பை என்னுமிடத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன.